# திருக்குறள் உணர்த்தும் அற சிந்தனைகள்

**முனைவர் சி.ஆறுமுகம்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை**
**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வடலூர் 607 303**
**Email: arumugam151972@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தை முன்னோர்கள் எட்டுத்தொகை, பத்து பாட்டு, பதினென்கீழ்கணக்கு, என வகைபடுத்தியுள்ளனர். அவற்றில் திருக்குறள் அற இலக்கியங்களாக வரையாறுக்கப்பட்டுள்ளது. இவை உலகப் பொதுமறை நூல் என்றும் இது தமிழில் கிடைத்த தவப்புலவர் வள்ளுவனால் எழுதப்பட்ட நூல் என்பதை பாரதி,

“வள்ளுவன் தன்னை உலகினுக்கு தந்த
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்று புகழ்ந்துரைத்துள்ளார். இவை உலகில் உள்ள நூல்களை விட முதன்மையான நூல் என்றும் அவற்றில் சாதி,மதம்,இனம் போன்ற கருத்துகள் இடம் பெறாத வகையிலும் அமைந்துள்ளது என்பதனையும். தமிழின் தொன்மையையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் வெளிபடுத்துவதில் திருக்குறள் மிகச் சிறந்த நூலாகத் திகழ்கின்றது.

இந்நூல் அறநெறி ஒழுக்கம், இல்லற ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம், தனி மனித ஒழுக்கம் போன்ற வாழ்வியல் அறங்களை சுட்டிக்காட்டினாலும் உலகம் வியக்கும் அற சிந்தனைகளான அன்பறம், ஈதலறம், இல்லறம், விருந்தோம்பலறம் போன்ற பன்முக அறங்களை ஆறாயபடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

உலக மொழிகளில் தொன்மையான மொழியாக விளங்குவது தமிழ் மொழி. அம்மொழியால் உயர்ந்த தமிழினம் தன்னிகரில்லா ஒரு தனியிடம் பெற்றுள்ளது. அத்தமிழினம் தனக்கெனத் தனித்த நாகரீகத்தையும், பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளதால்தான் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்; விண்ணோடும் உடுக்களோடும்; மங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்" என்று சிறப்பித்துள்ளார்.

தமிழின் தொன்மையையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் வெளிப்படுத்துவதில் திருக்குறள் மிகச்சிறந்த நூலாகத் திகழ்கிறது.

அவ்வகையில் திருக்குறளில் அறியலாகும் அன்பறம், சதலறம், இல்லறம், விருந்தோம்பலறம், போன்ற பன்முக அறங்களை மையப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அறம் வரையறை**

மானிடப் பிறவியாகிய மனிதன் தனக்கென வரையுறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைத் தொகுதியின் முழுநிறை வடிவமே அறமென்று கூறுவர். மனிதப் பிறவியில் பற்றிக்கொண்டு தொடர்ந்துவரும் தீவினையை அறுத் தெறிவதே அறமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும். எண்ணம் எழுவதற்கு அடிப்படையான மனம் மாசில்லாததாக இருக்கவேண்டும். இதனை,

***"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற"*** குறள்.34

என்ற திருக்குறளின் வழியே மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அறம் என்கிறார். மேலும் திருவள்ளுவர் பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை மன மாசுகளாக கருதலாகிறது. இவையில்லாமல் இருப்பதையும், ஒருவன் மனதளவில் குற்றம் இல்லாதவனாக இருப்பதையும் அறம் என்கிறார். இதனை,

***"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்"*** குறள். 35

என்ற குறட்பாவில் மனத் தூய்மையில்லாத தீய எண்ணமும், உண்மையை மறைத்துச் சொல்லப்படும். சொல்லும், செய்யப்படும் செயலும் அறமாகாதென திருவள்ளுவப் பெருந்தகை வரையறை தருகிறார்.

**அன்பெனும் அறம்**

அறங்களில் மிகவும் மென்மையும், வலிமையும் கொண்ட அறம் எதுவென்றால் பிற உயிர்களிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பெனும் அறமாகும். அன்பு என்னும் அறவலிமை மிகவும் சிறந்ததாகும். எலும்பு இல்லாத உயிரினமான புழுக்களை வெயிலில் காயவைத்து துடிதுடிக்கச செய்வதுபோல அன்பில்லாத மனிதர்களை அறக்கடவுள் துன்பங்களைத் தந்து வருந்தச் செய்யும் என்பதை,

***"என்பி லதனை வெயில்போலக் காயுமே***
***அன்பிலதனை அறம்"*** குறள். 77

என்ற குறள் வழியே அறிய முடிகிறது. மேலும் அன்பு வழியில் நடக்கும் உடம்பே உயிருள்ள உடம்பு என்பதையும். அன்பில்லாதவர் உடம்பு எலும்பைத் தோலால் போர்த்து மூடிக்கட்டிய வெற்றுடம்பே என்பதை,

***"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு***

***என்புதோல் போர்த்த உடம்பு"*** குறள். 80

என்ற குறட்பாவின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் இக்கருத்தை "ஆயிரம் ஆயிரம் உடம்புகள் திரியும், அவை உயிர்பெற அன்பே உதவும்"(திருக்குறள்-பாத்திரள். 80) கவிதை வரிகளால் இவ்வுலகில் அன்புடன் கூடிய வாழ்க்கைத்தான் உண்மையான வாழ்க்கை என்பதை அறியமுடிகிறது.

**ஈகையெனும் ஈதலறம்**

ஔவையார் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" (தனிப்பாடல் திரட்டு:58) என்கிறார். அவ்வரிய மனிதப் பிறவியெடுத்தவர் பண்புகளில் சிறந்து விளங்க வேண்டும். அம்மனிதப் பண்புகளில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுவது ஈகையெனும் ஈதலறமாகும்.

தன்னை நாடி வருபவர்களுக்கு இல்லை எனக்கூறாமல், இருப்பதைக் கொடுத்துதவுவதே மிகச்சிறந்த ஈதலறமாகும். ஏழைக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதே ஈகையாகும். மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். இதனை,

***“வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்***

***குறியெதிர்ப்பை நீரது உடைத்து"*** குறள் 221

என்ற குறளின் மூலம் ஒரு பயனை எதிர்பார்த்து செய்யும் அறம் சிறந்த அறமாகாது என்பதை அறியமுடிகிறது. மேலும் நல்லசெயலே என்றாலும் பிறரிடம் பொருள் கொள்ளுதல் தீதென்றும், மேலுலகம் எய்தலில்லை என்றாலும் வறியவர்க்கு ஈதலே நல்லது என்கிறார் திருவள்ளுவர். இதனை,

***"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்***

***இல்எனினும் ஈதலே நன்று"*** குறள். 222

என்ற குறளில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதால் அறிய முடிகிறது. மேலும் பசித்தவர்க்குக் கொடுத்தல், பசி என வந்தோர்க்குப் புசி எனத்தருதல், ஏதுமற்ற ஏழைகளின் மிக்க பசித் துன்பத்தைப் போக்குதல் ஆகியன மிகச்சிறந்த அறமாகும். அவ்வறமே செல்வம் பெற்றான் ஒருவன் தனது செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமாகும் என்பதை,

***“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்***

***பெற்றான் பொருள்வைப் புழி”*** குறள். 226

என்ற திருக்குறளில் தெளிவுபடுத்தியுள்ளதால் அறிய முடிகிறது. மேலும் பிறருக்கு உதவுகின்ற ஈகை குணம் வாய்க்கப் பெற்றவனிடம் உள்ள செல்வமானது அவ்வூரிலுள்ள அனைவருக்கும் பயன்படும் என்பதை,

***"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்***

***நயன்உடைய யான்கண் படின்"*** குறள். 216

என்ற குறட்பாவின் மூலம் ஊரின் நடுவே அமைந்துள்ள பழுத்த மரமானது அனைவருக்கும் பயனளிக்கும் என்பதைக் காணமுடிகிறது.

**இல்வாழ்க்கை அறம்**

இல்வாழ்க்கை என்பது ஒரு தனிமனித அறமாகும். இல்வாழ்க்கையை அறவழியில் நடத்த வேண்டும். இல்லறம், துறவறம் ஆகிய இருவகை அறங்களுள் மிகச் சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறம் ஆகும். அதாவது வாழ்க்கையாகிய இல்லறத்தில் குற்றமற்ற இல்வாழ்க்கை என்பது தவ வாழ்க்கைவிட மேலானதாகும். இதனை,

***"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்***

***பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"*** குறள். 49

என்ற குறளடிகளால் தெளியமுடிகிறது. மேலும் அன்பும் அறனும் பொருந்திய நன்முறையிலான வாழ்க்கையினை வாழவேண்டும் என்கிறார். மேலும் எல்லாரிடத்தும் உண்மையான அன்பும், அறநெறியில் செய்ய வேண்டிய கடமையும் அமையுமானால் அவையே இல்வாழ்க்கையின் பண்பாகவும், பயனாவும் அமையும் என்பதை,

***"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***

***பண்பும் பயனும் அது"*** குறள். 45

என்ற குறளின் மூலம் அறிய முடிகிறது. மேலும் இல்லாழ்க்கையில் குடும்ப வாழ்க்கை நடத்துகின்றவன் தனது தாய், தந்தை, மனைவி ஆகிய மூவருக்கும் நல்வழியில் உதவியாக இருக்கவேண்டும் என்பதை,

***“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***

***நல்லாற்றின் நின்ற துணை"*** குறள், 41

என்ற குறள் வழியே திருவள்ளுவர் இல்வாழ்க்கை அறத்தின் மேன்மையைக் கட்டியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் ஐம்புலன்களை அடக்கித் தியானம். நோன்பு ஆகிய நெறிகளில் நின்று தவம் செய்பவர்களைவிட அறநெறியில் நின்று இல்வாழ்க்கையை நடத்துபவன் உயர்ந்தவன் ஆனான். இதனை,

***“இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்***

***முயல்வாருள் எல்லாம் தலை”*** குறள். 47

என்ற வள்ளுவரின் வாக்கினால் அறிய முடிகிறது. அதாவது இல்வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும். சேர்ந்து பிறரிடத்தில் காட்டும் அன்பானது அறத்தோடு பொருந்தியதாக அமையவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுகிறார்.

**விருந்தோம்பல் அறம்**

இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவி கூடிவாழும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையைலிகும். அத்தகைய இல்லறம் சிறந்த நல்லறமாகச் சிறக்க அவசியமாவது விருந்தோம்பல் அறமாகும். இல்வாழ்க்கையை அறத்தோடு நடத்தும் இல்லாள்தான் வீட்டிற்கும் வரும் விருந்தினரைச் சரியான முறையில் உபசரிக்க முடியும்.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை நன்கு உபசரித்தபின் உண்பவளே நல்வில்லறத்தாள். வீட்டிற்கு வரும் விருந்தினரை முகம் மலர்ச்சியுடன் வரவேற்றுப் பேணுபவள் வீட்டிற்குள் திருமகளாகிய இலக்குமி மன மகிழ்ச்சியோடு குடிகொண்டு வீற்றிருப்பாள். இதனை,

***“அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து***

***நல்லிருந்து ஓம்புவான் இல்”*** குறள். 84

என்று குறட்பாவினால் அறிய முடிகிறது. மேலும் தன் இல்லத்திற்கு வருகைதந்த விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரித்துவிட்டு மனமகிழ்ச்சியோடு அவர்களை வழியனுப்பி விட்டு இனிவர இருக்கின்ற விருந்தினரை எதிர்ப்பார்த்து காத்திருப்பவர் வானுலகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்கு இணையானவர்கள் என மேற்காணும் குறளின் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

உலக பொதுமறை நூலாக விளங்கும் திருக்குறள் தமிழர்களின் வாழ்வில் அறங்களையும் இல்லற ஒழுக்கதையும், நீதி கருத்துகளையும் மேலும் தனிமனித ஒழுக்கம். சமுதாய வளர்ச்சி, பொதுநலம் போன்ற வாழ்க்கையின் அறநெறிகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. பொருளீட்டும் பொது வாழ்விற்கும், இல்லற வாழ்வியலகிய தனிமனித வாழ்விற்கும் அடிப்படையாக அமைவது அறமாகும்.

அவ்வகையில் திருவள்ளுவர் படைத்த திருக்குறளில் பல கோணங்களில் வகுத்துக்காட்டியுள்ள பன்முக அறங்களை கடைப்பிடித்தொழுகி, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து நலமார்ந்த நற்சிந்தனைகளை மனதில்கொண்டு தமிழுலகிற்கும், உலக அமைதிக்கும் துணை நிற்பதும், அதனை இன்றைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதும் நம் அனைவரின் தலையாயக் கடமையாகும்.

**துணைநூற்பட்டியல்**

1. திருக்குறள் தமிழ் மரபுரை, மொழிஞாயிறு பேராசிரியர் ஞா.தேவநேயப் பாவாணர், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை– 600 017, முதற்பதிப்பு – திசம்பர்–2000
2. தெய்வப் புலவர் அருளிய திருக்குறள்–உரை விளக்கம். உரையாசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன், வாத்தமான் பதிப்பகம், சென்னை– 600 017, முதற்பதிப்பு – திசம்பர் 2000.
3. திருக்குறள் பாத்திரள், செங்குட்டவன் கொடியோ கிராபிக்ஸ், சென்னை – 600 033. முதல் பதிப்பு 2001.
4. புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள், இந்து பப்ளிகேஷன்ஸ், தி. நகர், சென்னை – 600 017. ஏழாம் பதிப்பு. செப்டம்பர். 2006
5. திருக்குறள் அதிகார விளக்கம். கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி, வானதி பதிப்பகம், சென்னை– 600 017, இரண்டாம் பதிப்பு சூன் 2008
6. திருக்குறள் சமுதாயவியல் ஆய்வுத் தெளிவுகள் அருள்திரு திருக்குறள் தூயர் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை–600 108, முதல் பதிப்பு – திருவள்ளுவராண்டு 2047(சூன்– 2016).
7. திருக்குறள் மக்கள் உரை, அருள்திரு திருக்குறள் தூயர் முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் பதிப்பகம். சென்னை – 600 081, 22-வது பதிப்பு. சூன் 2018.